பொது சன நூலகம்
1997
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
12 AUG 1997
ஆணையாளர்

பாதுகாவலன்
PATHUKAVALAN

யாழ். ஆயர் மடுவிற்கு பயணமானார்
மடுப்பதியில் மூவருக்குக் குருப்பட்டம்
ஆ.யூட் நிக்சன் செ. யூட் அமலதாஸ் அ. அகஸ்ரின் ஆகியோர் ஆவணி. 4 இல் மடுப்பதியில் யாழ் ஆயரால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவர். இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை இவர்களின் மேலதிக விபரங்களைப் பெற முடியவில்லை.

இலங்கையின் முதல் கத்தோலிக்க தமிழ் வார ஏடு  மலர் 123  இதழ் 8  15 யூலை — 15 ஆகஸ்ட்

# 3ம் தர மத்தியஸ்தம் தேவை

## ★ அவுஸ்திரேலிய தூதுவரிடம் யாழ் ஆயர் வலியுறுத்து ★

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்விற்கு சர்வதேச மத்தியஸ்தம் தேவை என்று தம்மை சந்தித்த நெதர்லாந்து தூதரகப் பொறுப்பாளர், பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர்க்கு கூறிய அதே கருத்தை யாழ் ஆயர் மீளவும் ஆயர் இல்லத்தில் தம்மை சந்தித்த அவுஸ்திரேலியத் தூதுவர் டேவிற் றிற்றியிடம் வலியுறுத்தியுள்ளார். “இலங்கையின் தேசிய பிரச்சனையான இனப்பிரச்சனைத் தீர்விற்கு 3வது நாடு ஒன்றை மத்தியஸ்தம் வகிக்க வைக்கும் வகையில் அவுஸ்திரேலியா உட்பட ராஜ தந்திர வட்டாரங்கள் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.”

குடாநாட்டிலுள்ள மக்களுடைய மனநிலை எப்படியிருக்கிறது என்ற அவுஸ்திரேலிய தூதுவருடைய கேள்விக்கு ஆயர் பதில் கொடுக்கும்போது “சாதாரணநிலை இங்கு உருவாகிவிட்டதாக ஒருபோதும் கூற முடியாது. எங்களுடைய வீடுகளுக்கு திரும்பி வந்துவிட்டோம் என்று மக்கள் மனநிறைவு அடைந்தாலும் பயத்துடன்தான் மக்கள் எப்போதும் வாழ்கின்றார்கள். இங்கு அசாதாரண நிலையே நிலவுகிறது. சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதே யாழ்ப்பாண மக்களின் பேரவாவாகும்” என்றார்.

சொந்த இடம் திரும்பிய மக்கள் வீடு தொழில் இன்றி இன்னும் அல்லல்படும் நிலையைக் காணக் கூடியதாக இருக்கிறது என்று மேலும் தெரிவித்தார். நாம் மூன்றாம் தரப்பாக செயற்பட விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பதிலெதுவும் தெரிவிக்கப்படவில்லையே எனத் தூதுவர் பதில்கொடுத்தார்.

ஆயர் அவுஸ்திரேலிய தூதுவருக்கு வழங்கிய பேட்டியை ஒட்டி “மூன்றாம் தரப்பு” என்ற பெயரில் உதயன் பத்திரிகை 11.7.97 இல் ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது குறிப்பிடத் தக்கது.

### திருப்பாலர் சபைச் சிறுவர்களின் ஒன்று கூடலில் ஆயர்
## நீங்கள் இயேசுவின் மறைப் போதகர்களாக மாற வேண்டும்

“திருப்பாலர் சபைச் சிறுவர்களாகிய நீங்கள் புனித சின்னப்பரைப் போல் அறிவில் உயர்ந்து, விசுவாசத்தில் ஊன்றி யேசுவின் மறைப் போதகர்களாக மாற வேண்டும்” என்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் திருப்பாலர் சபை சிறுவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் இடம் பெற்ற திருப்பலி மறை உரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து தம் மறையுரையில் நீங்கள் யேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டும். அயலவருக்கு அன்பு காட்டும் போது யேசுவை அவர்களுக்கு அறிவிக்கிறீர்கள். உண்மை பேசி நேர்மையாக வாழும்போது யேசுவை எடுத்துக் கூறுகிறீர்கள்” என்றுரைத்தார்.

இவ் ஒன்றுகூடல் யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆடி மாதம் 6ம் திகதி இடம்பெற்றது. பெரும்பாலும் நகரை அண்மித்த பங்குகளில் இருந்து சுமார் 800 சிறுவர்கள் இதில் பங்கு கொண்டார்கள்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## யாழ் மறை மாவட்ட புதிய குரு முதல்வர்
### அருள்திரு J. P. E. செல்வராஜா



Fr. செல்வா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் செல்வராசா அடிகள் 1958ல் தம் குருத்துவப் பணிகளை ஆரம்பித்தார். நீண்ட காலம் ஆயர் இல்ல அலுவலக வேலைகளில் ஈடுபட்டு ஆழ்ந்த அறிவும் முதிர்ந்த அனுபவமும் பெற்ற இவருடைய நியமனம் பற்றிய அறிவிப்பு யாழ். ஆயர் அவர்களால் யூலை 3, ஆயர் தினமன்று வெளியிடப்பட்டது.

அருள்திரு செல்வராஜா அடிகள் மறைந்த எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையோடு நெருங்கி நின்று உழைத்த மூத்த குருக்களில் ஒருவர். 1961 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டுவரை ஆயர் எமிலுடைய காரியதரிசியாக விளங்கியவர். 1974 முதல் 1983 வரை யாழ் பேராலய பங்குத் தந்தையாக இருந்து பேராலயத்தைக் கட்டி யெழுப்பிய பெருமை இவரையே சாரும். 1983 முதல் 1992 வரை இளைப்பாறிய தியோகுப்பிள்ளை ஆண்டகையின் காரியதரிசியாக செயல்பட்டவர். 1992 இல் இருந்து குருமுதல்வர் நியமனம் கிடைக்கும்வரை சமயத்துறை நடுவராகவும் (Chancellor) புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய பங்குத்தந்தையாகவும் பணியாற்றியவர். ஆயரில்லாத வேளைகளில் மறைமாவட்டப் பரிபாலகராக கடமையாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு. இவரின் பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்கள்.

யாழ் புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரின்
## “உருவங்கள்” வெளிவந்துள்ளது.

யாழ் புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரின் “உருவங்கள்” — கையெழுத்துப் பிரதியின் 14 வது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த ஜனவரி - யூன் 97 இதழானது மறைந்த அருட்தந்தை ஜெபநேசன் அடிகளாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. தமிழ் கத்தோலிக்க எழுத்தாளர்களை உருவாக்குகின்ற இவர்களின் இப்பணிதொடர வாழ்த்துகிறோம்.

## கண்டி - அருள் ஊற்றிற்கு பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்


கண்டி மறை மாவட்டத்தின் கத்தோலிக்க தமிழ் மாத வெளியீடான “அருள் ஊற்று” தனது 7 வது ஆண்டில் கால் பதிக்கிறது. இவ் வேளையில் அருள் ஊற்றின் ஆசிரியர் அருள்திரு எச். என். ஆபிரகாம் அடிகளுக்கும் அவர் துணையாளர்களுக்கும், வாசகர்களுக்கும் பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

## கொடிய போர் உடன் நிறுத்தப்படவேண்டும்
### யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதிசமாதானக்குழு

யுத்தங்கள் எமது சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்களிலிருந்து மக்கள் இன்னும் மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது வன்னி யுத்தம் எமது எதிர் காலத்தை கேள்விக்குறியாக்கி இருக்கிறது. இப்போரை முன்னெடுத்து செல்பவர்கள் இதனை நன்குணர்ந்தும் வெறும் கௌரவத்திற்காக யுத்தம் செய்கின்றனர். பல அவலங்களை இப்போர் வன்னியில் வாழும் எம் உடன் பிறப்புக்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இக் கொடிய போர் உடன்நிறுத்தப் பட வேண்டும். அப்பாவிப் பொதுமக்களின் துன்பங்களை உணர்ந்து நீதியுடன் கூடிய சமாதானத்தைக்காண அனைத்துத் தலைவர்களும் முன்வர வேண்டும் — என்று குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## யாழ் மறைக் கோட்ட முதல்வராக அருள்திரு A. C. கிறிஸ்தோபர் அடிகள்



யாழ். புனித மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருள்திரு கிறிஸ்தோபர் அடிகள் யாழ் மறைக் கோட்ட முதல்வராக ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைப்பாறிய ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பெயர் கொண்ட தினமான யூலை 25 இல் நடைபெற்ற மதிய போசன விருந்தின் பின் யாழ் ஆயர் மேற்படி நியமனத்தை அறிவித்தார், தங்கள் பணிசிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்கள் நாங்கள் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைக் கூறி நிற்கிறோம்.

## “ஆயர் எமில் சமூகத்திற்கு செய்த கல்விப் பணி மறக்கப்பட முடியாதது”

இவ்வாறு 17 - 7 - 97 அன்று புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் எமிலியானுஸ் பிள்ளை அவர்களின் 25 வது வருட நினைவு திருப்பலியில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“ஆயர் அவர்கள் சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு பெரும் பங்காற்றினார். குருமாணவர்களை பல்வேறு குருத்துவக்கல்லூரிகளுக்கு அனுப்பி சிறந்த குருத்துவ உருவாக்கத்திற்கு வழி கோலினார். தூர நோக்குடன் செயற்பட்டு 2ம் வத்திக்கான் சங்க தீர்மானங்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தினார். அவர் காலத்தில் மக்கள் மத்தியில் பரவியிருந்த மூட நம்பிக்கைகளுக்கு சாவு மணி அடித்தார்.”

திருப்பலியைத் தொடர்ந்து இளைப்பாறும் குருக்களுக்கான விடுதியின் அடிக்கல் ஆயர் அவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்டது. — மதி இளம்பருதி —

# எம்கருத்து

## முத்திப்பேறு பெற்றபுனிதர் பிறற்றிக் ஓசான்னம் அவர்களின் மகிழ்ச்சிப் பெருவிழா

புனித வின்சன் டீ பவுல் சபையின் ஸ்தாபகர் திரு பிறற்றிக் ஓசான்னம் அவர்களுடைய முத்திப்பேறு பெற்ற பட்ட நிகழ்வில் யாழ் திருச்சபையும் இணைந்து கொள்கிறது.

யாழ் புனித வின்சன் டீ பவுல் மத்திய சபையினர் பாதுகாவலனிற் சிறப்பிதழ் வெளியிட்டு இந்நிகழ்வைப் பெருவிழாவாக நிகழ்த்தும் போது பாதுகாவலனும் தன் வாழ்த்துக்களைக் கூறி நிற்கிறான்.

புனித வின்சன் டீ பவுல் சபையின் பாதுகாவலராகப் புனித வின்சன் டீ பவுல் விளங்குவதனால் அவர் பெயரிலேயே இச்சபை அழைக்கப்படுகிறது. அதன் காரணமாகச் சபையின் ஸ்தாபகர் பிறற்றிக் ஓசான்னம் அவருடைய வாழ்க்கை வரலாறு என்பவற்றைப் பற்றி எம்மில் அநேகமானவர்கள் ஆழமாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லை.

1813 ஆம் ஆண்டு 13 சகோதரர்களுடன் பிறந்து 10 சகோதரர்கள் இறந்து போன பின் தமது அன்புமிக்க சகோதரியையும் இழந்ததனால் வாழ்வின் மிக ஆரம்பத்திலேயே அவர் தனிமையையும் வெறுமையையும், அனுபவித்தார்.

வைத்தியரான தகப்பனார், ஏழைகளுக்கு இலவச வைத்திய உதவிபுரிய ''ஊழியர்'' என்ற சங்கத்தின் தலைவியான தாயார், அநாதைகள், நோயாளர், உடல் உள வேதனைப் படுவோர் ஆகியவர்களைத்தேடி அவர்களுக்கு இரவு பகல் பணிபுரிந்தார்.

தமது சகோதர சகோதரிகளை வாழ்வின் ஆரம்பத்தில் இழந்த வேதனையும், தாய் தந்தையரிடம் விளங்கிய பிறரன்புப் பணியுந்தாம் இவரை இவ்வாறான ஒரு சபையைத்தாபிக்க ஆர்வமூட்டியது என்று கூறலாம்.

1834 இல், சட்டக்கலாநிதிக் கல்வியை முடித்தபின், மாசி 4 ஆம் நாள் பிறற்றிக் ஓசான்னம், தம் நண்பர்களோடு இணைந்து ஆரம்பித்த தரும சபையானது புனித வின்சன் டீ பவுலின் பாதுகாவலில் வைக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்டத்தில், வின்சன் டீ பவுல் சபையினர் இலைமறைகாயாக இருந்து அரும் பணியாற்றிக் கொண்டு வருகின்றனர். கிறிஸ்தவக் கடமைகளைப் பிரமாணிக்கமாக அனுசரிக்கும்படி தூண்டுவதாலும், செபத்தாலும், பிறரன்புச் செயல்களாலும் மக்கள் துயர் துடைப்பதைத் தமது பணியாகக் கொண்டு அண்மைக்காலங்களிற் குறிப்பாகப் போரின் அவலங்களின் மத்தியிற் சிறப்புப் பணியாற்றியுள்ளனர்.

வின்சன் டீ பவுல் சபையிற் சேர்ந்தால் எமக்கு உதவி கிடைக்காமற் போய் விடுமோ என்ற எண்ணத்தோடு அதிற் சேராமல் ஒரு சாரார் இருக்க, வின்சன் டீ பவுல் சபையிற் பணியாற்றுவது கவர்ச்சிகரமானதாக இல்லை என்று மற்றொரு சாரார் விலகியிருக்கின்றனர்.


வின்சன் டீ பவுல் சபையினர் இன்னும் அநேகமானவர்களைத் தம்மோடு பணிக்கு இணைத்துக் கொள்ளத்தக்க விதமாகவும் தமது பணி தேவையுடைய அனைவரையும் நாடிச்செல்லத்தக்க விதமாகவும் பணியாற்ற வேண்டும்.

இதே வேளை யாழ் புனித வளனார் கூட்டத்தின் தாபகராய்த் தியாக சேவைபுரிந்த அமரர் வண இயூஜீன் குருசோ பிறதர் அவர்கள் சென் வின்சன் டி போல் சபையின் சேவைகளால் மக்களைப் பாதுகாத்த மகத்தான பணிகளையும் நாம் மறக்கக்கூடாது.

## அமலமரித் தியாகிகளின் புதிய குருமணிகள் - 1997



அருள்திரு ஆ. ஜெறோம்
உதவிப் பங்குத் தந்தை
நிலாவெளி



அருள்திரு சூ. அல்றின்
மறையுரைஞர், தொடர்பகம்



அருள்திரு அந்தோனிமுத்து குருஸ்
உதவிப் பங்குத் தந்தை
அமதிபுரம்

## பாங்கொக்கில் யாழ் ஆயர்

ஆசிய ஆயர் பேரவையால் பாங்கொக்கில் நடத்தப்பட்ட இன்றைய இறையியலில் புத்தாக்கம் என்ற கருத்தரங்கில் ஆசியாவிவ் 40 ஆயர்கள் கலந்து கொண்டனர். இலங்கையின் அதி மேற்றாணியார் நீக்கிலஸ் மாற்க்கஸ் பெர்னான்டோ அவர்களும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களும் திருகோணமலை, மட்டுநகர் ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களும் அநுராதபுர ஆயர் எஸ்போஸ்ட் தோமஸ் அவர்களும் கலந்து கொண்டனர். மக்கள் மத்தியில் பக்தி இயக்கம், குடும்ப அப்போஸ்த்தலத்துவம், பங்கேற்கும் திருச்சபை ஆகிய மூன்று விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. 1948 ஆசிய ஆயற் பேரவையில் ஆயத்த ஒழுங்குகள் பற்றியும் பேசப்பட்டது. ஆசிய இறையியல் வல்லுநர்கள் அருள்திரு மத்தியூ வெல்லா நிக்கல் அருள்திரு ஆரோக்கியசாமி சே. ச. அருள்திரு பிலிக்ஸ் வில்பிறட் ஆகியோர் இப்பேரவையை வழி நடத்தினர். பங்கொக் கத்தோலிக்க மக்களின் மறைவாழ்வு ஸ்கை லப் என்ற தொலைக்காட்சி நிறுவனத்தின் இலவசபணி பற்றியும் இவர்கள் நேரடியாகப் பார்வையிட்டனர்.

## புனித வளனார் சபையின் 19ஆவது அமர்வு

புனித வளனார் சபையின் 19ஆவது அமர்வு 27.05.1997 ஆம் ஆண்டு திருமலை- மட்டுநகர் ஆயரின் தலைமையின் கீழ், அருள்திரு P. P. பிலிப் (முன்னாள் அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத் தலைவர்) வழிகாட்டுதலின் கீழ் மட்டக்களப்பு அருட் சகோதரர் தலைமை இல்லத்தில் நடைபெற்றது.

25, 26 ஆகிய இரு தினங்கள் ஆயத்த நாட்களாக இருந்தன. இறுதி அர்ப்பணம் செய்த 21 அருட்சகோதரர்கள் இந்த அமர்வில் பங்குபற்றினர். தூயஆவியானவரின் செபத்து

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## பாதுகாவலன் விநியோக பீடப்பணியாளர் கூட்டம்

மேற்படி கூட்டமானது எதிர்வரும் ஆவணி 16ஆம் திகதி யாழ் பேராலயத்தில் நடைபெறும். பாதுகாவலன் விநியோகம் சம்பந்தமாக யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் மேற்படி கூட்டத்திற்கு யாழ் மறைக்கோட்டத்திலுள்ள அனைத்துப் பீடப்பணியாளர் சபைகளிலிருந்தும் இருவரை அனுப்பி வைக்கும்படி இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திருப்பாலர் சபை - மழலைகளின் மகிழ்வான சபை

— அருள்சகோதரி சோபியா
தி. கு. ச. மாகாணத் தலைவி

ஏன் இந்தச்சபை உருவானது?

சிறுவர்களை தூய்மை, அன்பு, அழகில் வளர்த்தெடுக்க சிறுவர்கட்கு ஏற்படும் இன்னல்களான- அவர்கள் பாவத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் பலியாகும்போது அதனை எதிர்கொள்ளும் சவாலும் இச்சபையினுடையதே.

சிறுவர்கட்கு ஏற்படும் இன்னல்கள் எவை?

பொறுப்பற்ற பெற்றோர் கையில் வேண்டாதவர்களாகக் கணிக்கப்படுவதால் பாரிய உள்த்தாக்கங்கட்கு உட்பட்டுத் தம் எதிர்காலத்தில் பிரச்சினைக்குரியவர்களாகின்றனர். பொறுப்பற்ற குடும்பம் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளில் அக்கறை கொள்ளமாட்டாது. எனவே போஷாக்கின்மை, அறிவின்மை, நோய், இப்பேர்ப்பட்ட நிலைகட்கு உட்படுவார்கள்.

சிலஇடங்களில் பிள்ளைகள் விற்கப்படுவதும் உண்டா? ஏன் இல்லை. பிள்ளைகளைப் பிச்சைக்காரராகப் பாவித்துப் பணம் சம்பாதிக்கும் மனிதரும் நிறுவனங்களும் பிள்ளைகளைக் குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள்.

பாலியற் துர்ப்பிரயோகத்துக்காகவும் குழந்தைகள் விற்கப்படுகிறார்கள். பணம் சேர்க்கும் பந்தயமாகச் சிறுவர்கள் பணம், அதிகாரம், ஆணவ வெறியட்குப்பலியாகிறார்கள். 'போர்க்காலங்களில் கள்ளங்கபடமறியாப் பிள்ளைகள் போரில் பங்கெடுக்கின்றார்கள்' இது எவ்வாறு?

குழந்தைகளைத் தீமையான செயல்களைச் செய்வதற்காக அவர்களின் போதிய அறிவின்மை, விளையும் தீமைகளைப் பற்றிச் சிந்திக்கும் திறனின்மை இவற்றைப் பயன்படுத்திச் சில செயல்களைச் செய்யத் தூண்டும்போது நேரடியாகவல்ல, மறைமுகமாக இவர்கள் இவ்வாறு பங்காளிகளாகின்றார்கள்.

இச்சிறுவர்கள் திருப்பாலத்துவ சபையில் எவ்வாறு இடம்பெறுகிறார்கள்?

திருப்பாலத்துவசபைச் சிறுவர்கள் தம் செப, சிறுசிறு தியாக, சிறிய காணிக்கை இவற்றால் கல்வியறிவு, உணவு, வசதிகள், சுகாதார வசதிகள் இல்லாத சிறார்கட்கு உதவுகின்றார்கள்.

உலகம் முழுவதும் உள்ள ஏழைச்சிறார்களின் பின்னிடைவானநிலை இதனால் உயர்த்தப்படுகிறது. இச் செயற்பாடுகளால் சிறுவர்களும் மறைபோதகர்களாகின்றார்கள். அப்படியானால் இது ஒரு அனைத்துலக நிறுவனந்தானே!

நிச்சயமாக, இது குழந்தைகட்கான ஒரு அனைத்துலக நிறுவனம். தேசிய மறைமாவட்ட, பங்கு ரீதியாக இதனை ஊக்குவிப்போரைத் தலமைதாங்கி குருக்கள், துறவியர், மறைபோதகர்கள், பொதுநிலையினரின் உதவியுடன், ஒழுங்குடன் நடைபெறும் ஒரு நிறுவனம்.

இந்த நிறுவனம் எம் சிறார்கட்கு எவ்வாறு உதவுகின்றது?

போரினால் அதிர்ச்சியுற்றவர்கள், ஊனமுற்றோர்? அனாதைகள், கல்விபெறமுடியாதோர். இடம் பெயர்ந்த பிள்ளைகள், பாதுகாப்பற்ற சூழலில் வசிப்போர், வியாதியுற்ற பிள்ளைகள், உளவளக்குறைபாடுடையோர், இவர்கட்குச் சிறுவர்களின் சிறியகாணிக்கையால்பெற்ற உதவிகளைக் கொண்டு உதவுகின்றது. சிறுதுளி பெருவெள்ளம் அல்லவா

யாழ்ப்பாணம்

# புனித வின்சன் டீ பவுல் சபையின்

## ஸ்தாபகர் பிறட்றிக் ஓசான்னம் அவர்களுடைய முத்திப்பேறு பெற்ற சிறப்பிதழ்

மலர் அமைப்பு
யாழ் வின்சன் டி பவுல் மத்திய சபை



Our principal founder,
FREDERIC OZANAM

## யாழ் ஆயரின் ஆசிச்செய்தி

புனித வின்செண் டி பவுல் சபையின் ஸ்தாபகர் பிரெட்ரிக ஓசானம் என்பவருடைய முத்திப்பேறுபெற்ற பட்டத்தையொட்டி யாழ் மறை மாவட்ட வின்சன்டி பவுல் சபையினர் பாதுகாவலனில் சிறப்பிதழ் வெளியிடுவதை அறிந்து மனம் மகிழ்கிறோம். எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.


கிறிஸ்தவ நெறிமுறைகளை அனுசரிக்க மக்களைத் தூண்டுவதையும் செபத்தாலும் பிறர் அன்பு செயல்களாலும் மக்கள் துயர் துடைப்பதையும் தமது குறிக்கோளாகக் கொண்ட இச் சபையினர் யாழ் மறை மாவட்டத்தில் இலைமறை காயாக இருந்து ஆற்றிய பணி மகத்தானது.

யாழ் மக்கள் இன்னும் துன்பத்தை அனுபவிக்கும் போதும், மீளத் தம் இடங்களுக்கு வந்து அல்லப்படும் போதும் இவர்களின் பணி இன்னும் சிறப்பாயிருக்க வேண்டுமென ஆசிக்கிறோம். உங்கள் பணிக்கான காலம் இதுதான். சிறப்புப் பணியாற்றுங்கள் என வாழ்த்துகிறோம்.

இவ் வேளையில் யாழ் மறை மாவட்ட எல்லாப் பந்திகளிலும் பணியாற்றும் அனைவர்க்கும் எமது இறையாசீர் மிக்க வாழ்த்துக்கள் உரித்தாகுக.

+ தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

## புனித வின்சன் டீ பவுல் சபையின் அடிப்படைத் தத்துவங்கள்



இச்சபையின் அடிப்படைத் தத்துவங்கள் மூன்று கரங்களால் காட்டப்படுகின்றன. அதாவது முதலாவது கரம் இறைவனுடையது,

இக்கரம் உதவிபுரியும் புனித வின்சன்டீ பவுல் சபையின் சேவையாளரை ஆசீர்வதிக்கின்றது.

இரண்டாவது கரம் – உதவி புரியும் சேவையாளருடையது.

மூன்றாவது உமது உதவியை நாடிநிற்கும் ஏழையின் கரம்.

ஏழை என்பவன் யார்?

உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலோ, மருத்துவசேவை, தொழில் கல்வி போன்ற வசதிகள் இன்றி உடல் நோயால் வருந்தி, மன நோயால் பாதிக்கப்பட்டு, சிறைச்சாலையில் அல்லது வீடுகவில் ஆதரவின்றி தனிமையில் விடப்பட்டோ ஏங்கும் எமது சகோதரர்கள் தான் ஏழைகள் எனப்படுவார்கள்.

இவர்களைத்தான் கிறிஸ்தவர்களாகிய நாம் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு ஆறுதல்கூறி, அவர்களுக்குத் தேவையான சரீர, பண, ஞான உதவிகளை வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே ஏழைகளுக்கு உதவிவழங்க எமது கரங்களும் மனங்களும் நீளட்டும். இதற்காக இறைவனது ஆசீர்வாதத்தையும் வழிநடத்துதலையும் விசேடமாக வேண்டுவோம்.

எஸ். லியோ எதிர்மன்னசிங்கி
தலைவர்
புனித வின்சன் டீ பவுல் சபை
புனித திருமுழுக்கருளப்பர் பந்தி, சுண்டிக்குளி.

## யாழ் மறைமாவட்டப் பந்திகள்

1. புனித சூசையப்பர் பந்தி
பேராலயம், யாழ்ப்பாணம்
2. புனித யுவானியார் பந்தி
புனித யுவானியார் ஆலயம்
சுண்டிக்குளி
3. புனித கமிலஸ் பந்தி
இளவாலை, யாழ்ப்பாணம்
4. புனித யாகப்பர் ஆண்கள் பந்தி
5. புனித யாகப்பர் பெண்கள் பந்தி
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர், யாழ்ப்பாணம்
6. புனித சூசையப்பர் பந்தி
புனித யுவானியார் ஆலயம்
நெடுந்தீவு
7. புனித மரியாள் பந்தி
புனித மரியாள் ஆலயம்
நாவாந்துறை
8. புனித திரேசாள் ஆலயம்
புனித திரேசாள் ஆலயம்
கிளிநொச்சி
9. புனித செபஸ்ரியார் பந்தி
கரம்பொன், ஊர்காவற்துறை
10. புனித இராயப்பர் பந்தி
நவாலி
11. புனித நீக்கிலார் பந்தி
புனித நீக்கிலார் ஆலயம்
நாவாந்துறை
12. புனித சூசையப்பர் பந்தி
புனித சூசையப்பர் ஆலயம்
அளவெட்டி
13. புனித செபஸ்ரியார் பந்தி
பாரதி புரம், கிளிநொச்சி
14. புனித நீக்கிலார் பந்தி
மிருசுவில்
15. புனித அந்தோனியார் பந்தி
பாசையூர்
16. புனித ஆசீர்வாதப்பர் பந்தி
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்
நல்லூர்
17. புனித லிகோரியார் பந்தி
புனித லிகோரியார் ஆலயம்
சாவகச்சேரி
18. புனித மரியாள் பந்தி
புனித மரியாள் ஆலயம்
ஆனைக்கோட்டை
19. புனித அடைக்கல நாயகி பந்தி
அடைக்கல நாயகி ஆலயம்
யாழ்ப்பாணம்

## பிறர்க்குதவிய பிறட்றிக் பெருமகன்

அன்புப் பணிதனை ஆற்றுதற் கென்றே
அமல யேசுவின் அடியிணை நின்றே
வின்செண்டிபோல் சபை தாபகம் செய்த
விற்பனர் பிறட்றிக் ஓசானம் வாழ்க.
பொறுமையின் வடிவமாய் அரும்பணி புரிந்தே
புனிதராய் உயர்ந்தவர் புகழ்பெறும் நாளில்
வறுமையின் துயரிலே வாடிடும் மக்கள்
வாழ்வுற உறுதியாய் நாமுழைத்திடுவோம்.
ஆதரவின்றியே அலைந்திடும் மக்கள்
அன்பினில் சுகம்பெற அரவணைத்திடுவோம்
வேதனை சுமந்திடும் அகதிகள் எங்கள்
சோதரர் வாழ்ந்திடக் கரங் கொடுத்திடுவோம்.
ஏழைக் கிரங்கிடும் வின்செண்டி போல் சபை
என்றும் வளர்ந்திட இரகரம் கொடுப்போம்
நாளும் பசிப்பிணி நீக்கிடும் நெஞ்சம்
ஞானபரஞ்சோதி வானகம் சேரும்.

இ. அலெக்ஸ் அமலரட்டினம்
தலைவர்
வின்சன் டி போல் சபை
புனித சூசையப்பர் பந்தி, புனித மரியாள் பேராலயம்

## மத்தியசபை ஆன்ம இயக்குநரின் செய்தி

"சின்னஞ் சிறு என்சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத். 25;40) என்ற இயேசு பிரானின் வார்த்தையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட புனித வின்செண் டி பவுல் ஏழைகள் மட்டில் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். இவர் வாழ்ந்த காலமாகிய 17ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் ஏழை பணக்கார வர்க்க பேதம் தலைவிரித்தாடியது. அரச பிரபுக்கள் செல்வந்தர்கள் ஒருபுறம், மறுபுறம் உரிமையற்று வறுமையிலும், அறியாமையிலும் வாடிய ஏழை மக்கள், இப்படியோர் சமூகப் பின்னணியிற் தான் தன்னை முழுமையாகக் கையளிக்கின்றார் புனித வின்செண் டி பவுல்.

அருள்திரு
இரா. சூசைநாதன்
மத்திய சபை ஆன்ம இயக்குநர்

சரியாக இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் இப்புனிதரின் எண்ணக் கருவையும் செயற் திறனையும் தன்னில் ஆழமாக உணர்ந்த மிலான் நகர இளைஞன் பிறட்றிக் ஓசான்னம் ஏழைகளுக்காக தன்னை அர்ப்பணிக்கத் தயாரானார். "தரும சேவையை ஆன்மீக முன்னேற்றத்தின் திசையிலும், நீதியின், திசையிலும் செலுத்துங்கள். ஏழைகளின் உருவில் துன்புறும் கிறிஸ்துவைக் கண்டு, நற்சிந்தனையால் உங்களைத் தூய்மைப்படுத்துங்கள்" என்று அறைகூவல் விடுத்தார். அவரும் அவரோடு சேர்ந்த இளைஞர்களும் ஏழைகளுக்காக அயராது உழைத்தனர். இவர்களது மனதில் ஏழைகளுக்காக உதவுவதுமட்டும் எண்ணமாக இருக்கவில்லை. மாறாக கவனிப்பார் இன்றிக் கிடக்கும் ஏழைகள் மட்டில் பணம் படைத்த மனிதர் மனதில் என்றும் எள்ளளவேனும் இரக்க சிந்தையை உருவாக்கி, அவர்கள் ஏழைகளின் பிரச்சனைகள் என்ன என்பதை உணர்ந்து கொள்ளச் செய்யவேண்டும் என்ற நோக்கமும் இருந்தது.

இப்படியான செயற்பாடுகளுக்காக 1834ஆம் ஆண்டு மாசி மாதம்4ஆம் நாள் பிறட்றிக் ஓசான்னம், அவரது நண்பர்களாலும் உருவாக்கப்பட்டது தான் " புனித வின் செண் டி பவுல் சபை." உலகெங்கும் பரவிப் பணிசெய்யும் இத் தரும சபையை கருவாக்கி, உருவாக்கி, வழிநடாத்தி நின்ற உயர்ந்த மனிதன் பிறட்றிக் ஓசான்னம் அவர்களுக்கு அன்னையாம் திருச்சபை வருகின்ற ஆவணி 22ம் திகதியன்று முத்திப்பேறுபெற்ற பட்டம் அளித்துச் சிறப்பிக்கவுள்ளாள். இது எமக்கெல்லாம் பேருவகையூட்டும்நிகழ்வாகும். இந்நிகழ்வின் மகிழ்ச்சியிற் திளைக்கும் அதேவேளை, புனித வின்செண் டி பவுல் சபை அங்கத்தவர்கள் உதவி அங்கத்தவர்கள், விசுவாசிகள் அனைவரும் இவரின் முன்மாதிரிகையைப் பின்பற்ற அழைக்கப்படுகின்றோம்.

பணமின்றி உணவின்றி
இருக்க இடமின்றி ஏழைகளாய்......
உடையின்றி உயிர்காக்க வழியின்றி
மனித மாண்பிழந்த ஏழைகளாய்......
நீதியில், உரிமையில்,
உறவுகளில் ஏழைகளாய்......
முகமிழந்த எம்மவரை
தாங்கும் கருவிகளாக
நாம் மாறிட
விடுக்கின்றார் அவர் சவால்.

இவரது முத்திப்பேறுபெற்ற பட்டமளிப்பு விழாவில் அனைவரையும் செபத்திலும், தியாகத்திலும், உயிரோடும், உணர்வோடும் ஒன்றிணைய அழைத்து நிற்கின்றோம்.

## யாழ் மத்தியசபை உபதலைவரின் செய்தி

எமது சபையின் ஸ்தாபகர் பிறட்றிக் ஓசான்னம் அவர்களின் முத்திப் பேறு பெறும் நிகழ்வு பற்றி அறிந்த புனித வின்சன் டி பவுல் சபை மத்திய சபையினர் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த காலத்தில் புனித வின்சன் டி பவுல் சபைனர் உலகளாவியரீதியில் செய்த பணிக்கும், குறிப்பாக யாழ் மறை மாவட்டத்தில் செய்த பணிக்குமான அங்கீகாரமாக இதை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

எமது மண்ணின் இன்றைய தேவைகளில் எமது சபையின் பணி இன்னும் புதிய அர்த்தங்களைப் பெறவும், ஆழமாகப் பெறவும் வேண்டுமென நாம் ஆசிக்கிறோம், எமது யாழ் மறை மாவட்ட அனைத்துப் பந்திகளுக்கும் எம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

பென்சமீன் ஹேக்கப்
உப தலைவர்
புனித வின்சன் டி போல்
யாழ். மத்திய சபை.

# குடும்பம் ஒரு கதம்பம்

இயேசு திருச்சபைக்கு அன்பு செய்து அதற்காகத் தம்மை கையளித்தார். அதுபோலவே மணமக்களும் ஒருவரொருவருக்குத் தங்களைக் கையளித்து நிலையான பிரமாணிக்கத்துடன் அன்பு செய்ய வேண்டும் என்பதற்காக அவர் அவர்களோடு தொடர்ந்து தங்கி இருக்கிறார்.

(இன்றைய உலகில் திருச்சபை 48)

ஆழ்ந்த நெருங்கிய உறவுதான் குடும்பத்தில் மகிழ்ச்சியின் இருப்பிடம். இந்த உறவு ஒருவர் ஒருவரை நிறைவாக்குகின்றது. நிறைவில் இருந்து பெருக்கெடுப்பதே மெய்யான மகிழ்ச்சி.

மகிழ்ச்சி தரும் உறவில் நிறைவு காண முக்கியமாக நாம் நான்கு வழிகளில் முன்வரவேண்டும். 1. உள்ளங்களின் சங்கமத்தால் 2. உடல் உறவின் பூரணத்துவத்தால் 3. ஒருவர் மற்றவருக்காக என்னும் சமூக பந்தனத்தால் 4. இடைவெளி இல்லாத இறை நெருக்கத்தால். இவ் வழிகளின் சீரான வளர்ச்சியில் தான் மணவாழ்வின் மகிழ்ச்சி பொதிந்துள்ளது. எடுத்த எடுப்பிலே ஆணும் பெண்ணும் திருமண உறவுக்குள் வந்தவுடன் இவை எல்லாம் கிடைக்கப் பெற்று விட்டதென்று கருதக் கூடாது. இருவரதும் களங்கமில்லா முயற்சியில்தான் இதன் வெற்றி தேங்கிக் கிடக்கிறது. இதன் முதற் படியைச் சற்று ஆராய்வோம்.

திருமண வாழ்வு சாதாரண ஒரு ஒப்பந்த அடிப்படையில் உருவாகும் ஒன்றல்ல. மாறாக கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். இவ் உடன்படிக்கைக்கு முத்திரையாக இருப்பது ஒருவர் ஒருவருக்கு அளிக்கும் உள்ளார்ந்தரமான சம்மதம் ஆகும். இச் சம்மதம் கடுதாசிக்கு மேலாக உள்ளங்களில் எழுதப்படுகிறது. இதன் விளைவாகவே ஒருவருக்கு ஒருவர் தம்மைக் கையளிக்கின்றனர். ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்கின்றனர். கையளிப்பதும், ஏற்றுக் கொள்வதும் உள்ளங்களின் சங்கமத்தின் நுழைவாயிலாக இருக்கின்றன.

பணம், புகழ், கல்வி, அந்தஸ்து, அழகு, செல்வங்கள் அத்தனையையும் கடந்து உள்ளங்கள் கலக்க உந்துதலாக இருப்பது கையளிப்பதும் ஏற்றுக் கொள்வதுமாகிய உன்னத உணர்வின் நிகழ்வுகளே. இது உடலிலும், உள்ளத்திலும், உணர்வுகளிலும் ஆத்மாவிலும் நிகழ்கின்றபடியால் அழிக்க முடியாதது, இழிக்க முடியாதது, மறக்க முடியாதது, காரணம் குறைபாடுடைய ஒன்றல்ல. பூரணமானதே.

மேற் கூறிய கையளிப்பும் ஏற்றுக் கொள்ளுதலும் நிரந்தரமான நிஜவாழ்க்கையாகி விட்டால் அங்கே ஒருவர் மட்டில் ஒருவருக்கு பரிவும் பாசமும் உண்டாகும், அன்பும் அரவணைப்பும் வரும், கனிவும் கரிசனையும் ஏற்படும், ஏற்பும் மதிப்பும் பிறக்கும். உடல்களின் இணைவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் மன மகிழ்ச்சிக்கு குறையே இராது. தம்பதியரிடையே இப் பண்புகள் விழிப்போடு வளர்க்கப் படவேண்டும்.

உள்ளங்களின் ஒருமைப்பாடு இல்லாத குடும்ப வாழ்க்கை ஆண்டவன் இல்லாத ஆலயம்போல, விளக்கு இல்லாத வீடு போல வெறுமையும் வேதனையும் நிறைந்த ஒன்றாகிவிடும்.

ஒருவர் மற்றவரின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் உணர்வுப் பாதுகாப்பு அழித்துப் பக்க பலமாக இருக்கவேண்டும் — அன்போடு கூடிய மனந்திறந்த உரையாடல் தொடர்புகளை நெருங்கவைத்து உணர்வுகளைப் புரிந்து கொள்ள உதவி செய்யும்.

தான்கற்பனை செய்து வைத்திருந்த ஆணைப் போலவோ அல்லது பெண்ணைப் போலவோ இல்லையே நமக்குக் கிடைத்த துணை என்று ஏங்குவது, இன்னொரு கணவன் மனைவியோடு ஒப்பு நோக்கிப் பார்ப்பது உறவுக்குப் பதில் விரிசலையும் விபரீதங்களையுமே கொண்டுவரும்.

எனவே ஒவ்வொரு தம்பதியரும் தங்களுக்குக் கிடைத்த வாழ்க்கைத் துணை இறைவன் தந்த பெருங் கொடையென ஏற்று இன்னும் காலம் தாழ்த்தாமல் சம்மதத்திற்குத் தரும் சன்மானமாக உள்ளங்கள் கலந்து பேரானந்தம் பிறக்க வழி சமைப்போம்.

''இஸ்ராயேல் முடிவில்லாக் காலத்திற்கும் உன்னை நான் மணம் செய்து கொள்வேன், நேர்மையிலும், நீதியிலும் பேரன்பிலும் உன்னை மணம் செய்துகொள்வேன். மாறாத அன்புடன் உன்னை மணம் செய்து கொள்வேன். ஆண்டவராம் என்னை நீயும் அறிந்து கொள்வாய். (ஓசே 2/19—20)

— எஸ். எவ். சவுந்தரம்

# யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே?

இ. ம. ஜெயசீலன்
மறையாசிரியர்

*அண்ணை யூபிலி எண்டால் என்ன அண்ணைப் பகுதியைப் படித்தேன். அங்கை யூபிலி எண்டால் நினைவுகூரும் நாள் மகிழ்ச்சியின் நாள் என்று சொல்லியிருக்கிறியள், சரி, இப்ப எல்லாத்துக்கும் வேதாகம ஆதாரம் கேட்கிற கூட்டம் பெருகிவிட்டது. யூபிலிபற்றி வேதாகத்திலை எங்கேயும் இருக்கா சொல்லுங்கோ?*

தம்பி, நீர் வேதாகமம் சரியாய் வாசிக்கவில்லைப் போலை. லேவியராகமம் 25 ஆம் அதிகாரத்தையும், உப ஆகமம் 15 ஆம் அதிகாரத்தையும் வாசியும். அப்பதெரியும் யூபிலி எண்டால் என்ன எண்டு. அங்கை என்ன சொல்லியிருக்கு எண்டால் யூபிலி ஆண்டு மன்னிப்பின் ஆண்டு. பரிசுத்தமான ஆண்டு. அதாவது கடன்பட்ட சகோதரர்களின் கடன்கள் மன்னிக்கப்பட வேண்டும். அடைமானம் வைத்த உடைமைகளை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள். விளைச்சல் அனைவருக்கும் சொந்தம் இந்த இரு அதிகாரங்களையும் படிக்கும்போது இறைவன் ஆதியிலை மனிதனைப் படைத்து அவனை எப்படியாக உலகத்தில் வாழவைத்தாரோ அந்த இலக்கு யூபிலி ஆண்டில் நடைபெறவேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும்

இப்ப பாரும் தம்பி, இண்டைக்கு உலகத்திலை அநியாயம், ஊழல், சுரண்டல் ஏமாற்று, சகோதரனை வஞ்சித்தல் அதிகாரப்போர் இப்படியாக உலகம் பாழடிக்கப் படுகிறது. ஒரு சிலரின் வாழ்வுக்காக பலர் அடிமைகள் ஆக்கப்படுகின்றனர். நசுக்கப்படுகின்றனர். ஆனால் இறை எண்ணப்படி உலகம் இறைவனின் உடமை. மக்கள் அனைவரும் அவர்தம் பிள்ளைகள். ஆனதினாலை எல்லோரும் உலகில் மகிழ்ச்சியாக, அமைதியாக, சமாதானமாக சகோதர உறவில் வாழ்வதுதான் உண்மையான வாழ்வு. எனவே தான் இந்த உண்மைகளை மதித்து வாழ மக்களை தூண்டுவதுதான் யூபிலியின் நோக்கம் சரி அடுத்தமுறை உம்மை சந்திக்கிறேன். எனக்கு வேற வேலையிருக்கு.

# திருமண தகவல் பிரிவு - அகவொளியில்

திருமண வாழ்க்கையில் தங்கள் பிள்ளைகளை இணைக்கமுடியாமல் தவிக்கும் பெற்றோருக்கு உதவி செய்யவும் கூடுமானவரை உண்மையான தகவல்களை இரு சாராரும் அறிந்து சீரான திருமணங்கள் நடைபெற உதவுவதும் இப்பிரிவின் சிறப்புப் பணியாகும். தகவல் பிரிவின் உதவியை நாடுவோர் இதற்குரிய படிவத்தை நிரப்பி கேட்கப்பட்ட ஆவணங்களோடு 'திருமண தகவல் பிரிவு' அகவொளி 131 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமோ கிடைக்கச் செய்யலாம். படிவங்கள் அகவொளியிலும் பங்குத்தந்தையரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

### மணம் கமழும்

வானும் குளிர் நிலவும்
வளம் நிறை நிலமும் பயிரும்
கானும் கன மழையும்
கரைபுரளும் நதியும் மண்ணும்
நீரும் மீனும் போல்
நிலை பிரியா வாழ்வதனால்
கணவன் மனைவி யென்ற
கவின் மிகு கலைக்கூடம்
பணம் நிறையா வாழ்வினிலும்
மனங் கலந்த வாழ்வினிக்கும்
மணவாழ்வில் மணங் கமழும்
மரணந்தான் பிரித்திடுமோ?

— அபிர்ராஜன்—

### கிறிஸ்தவ குடும்ப இயக்கம்

'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையம் ஒவ்வொரு பங்குகளிலும் கிறிஸ்தவ குடும்ப இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றது. குடும்ப நல்வாழ்வு சம்பந்தமாக பங்கு மட்டத்திலும், மறைக்கோட்ட மறைமாவட்ட மட்டத்திலும் குடும்பவளத்துணை நிலையம் எடுக்கும் எல்லா நிகழ்வுகளும் இதன் அங்கத்தவர் ஊடாகவே எதிர் காலத்தில் இடம்பெறும்.

# சிறுவர் விருந்து

அன்பான தம்பி தங்கைகளே!

யூபிலி ஆண்டிலே காலடி எடுத்து வைத்துள்ள நாம் ''கிறிஸ்துவை அறிதலின் வாயிலாக அருளும் நலமும் பெருகுக'' என்ற மையக்கருத்துக்கமைய வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

''நான் உங்களுக்கு உண்மையாகச் சொல்வதாவது கடவுளின் அரசைக் காணும்வரை இங்கிருப்பவர்களில் சிலர் சாவுக்குள்ளாக மாட்டார்கள்'' இதைப்பற்றி புனித லூக்காஸ் நற்செய்தி (அதிகாரம் 9:23-27) வாசகங்களை வாசித்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

''சிறுவர் விருந்து'' என்னும் பகுதியில் இடம் பெற்ற குறும்புதிர் 4இல் உள்ள குறுக்கெழுத்துப் போட்டியில் இம்முறை அதிகமானோர் பங்கு பற்றியுள்ளமை வரவேற்கத்தக்கது. இதனால் அக்காவுக்கும் மகிழ்ச்சி. பலர் சரியானவிடைகளை அனுப்பியிருந்தீர்கள். வழமையான குலுக்கல் முறையில் அதிட்டசாலிகள் தெரியப்பட்டுள்ளனர். ஏனையோர் சோர்வடையாது முயற்சி செய்யுங்கள்.

அன்புடன் சிசிலிஅக்கா

### குறும்புதிர் 4இன் பரிசு பெற்றோர் விபரம்

#### பரிசு பெற்றோர்

1. ஜெனற் றெக்ஸினி தேவராசா
   யாழ்/கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
2. டயானா அன்ரனி
   யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்
3. ம. மேரி பிரான்ஸ்சிஸ்கா
   யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
4. சி. சிவராஜ்
   யாழ் / புனித அந்தோனியார் கல்லூரி
   ஊர்காவற்றுறை.
5. டெ. கனியூட் அரவிந்த ராஜ்
   யா / இந்துக் கல்லூரி
6. கொ. கஸ்தூலின் தூரிகா
   24, 3ம் குறுக்குத் தெரு
   பாஷையூர்
7. அ. தேவராஜா லிவிங்ஸ்ரன்
   யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்
8. இ. பீற்றர் நரேந்திரன்
   நெல்லியடி மகாவித்தியாலயம்

### குறும் புதிர் 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | 2 | | ச | 3 | |
| 4 | | | ■ | | ■ |
| ங் | | ■ | 5 | ட | |
| | ■ | 6 | | | ■ |
| 7 | | | ர் | ■ | 8 |
| ■ | 9 | | ■ | 10 | ரி |

#### இடமிருந்து வலம்

1. யேசுவை இப்படியும் அழைப்பர்.
4. யேசு இவரின் மரணச் செய்தி கேட்டுக் கண்ணீர் விட்டார்.
5. கிராமப் புறங்களில் வீடு வளவிற்குப் பாதுகாப்பாக வாயிலில் இதனை அமைப்பர்.
6. தூரம் என்பதைக் குறிக்கும் ஒரு சொல்.
7. எழுது வினைஞர்களை இப்படியும் அழைக்கலாம்.
9. புனித வளனாரின் கரங்களில் மலர்ந்த மலரின் இறுதி எழுத்து மறைந்துள்ளது.
10. மிருகங்களில் தந்திரமுள்ளது.

#### மேலிருந்து கீழ்

1. தென்னைக்கு வழங்கும் பெயர்களில் இதுவும் ஒன்று.
2. யேசு தண்ணீரை இப்படி மாற்றினார்.
3. இது உள்ளவர்களை எவரும் விரும்பமாட்டார்கள்.
5. ............ என்பது குற்றம் ஆகும்.
6. அன்பு என்பதன் மறு வடிவம்.
8. பாரிய மரங்களையும் தூக்கவல்ல மிருகம்.

## மகளே ! இறை அனுபவ வாழ்வுக்கு உன்னை அர்ப்பணிக்க விரும்புகிறாயா ?

செபமாலைக் கன்னியர் சபை

உன்னை அழைக்கிறது

உன்னில், சமுதாயத்தில் இயற்கையில் உலகில் உறையும் இறைவனை உணர்ந்து உலகளாவிய உறவில் இணைந்து,

— இறைவனுக்கு மிகச் சிறந்த முறையில் மகிமையை அளிக்க நற்கருணைநாதர் முன் இரவு பகல் தொடர்பான ஆராதனை செலுத்தவும்.

— மறைந்த செபதப தியாக வாழ்வினால் உலகினரின் பொருட்டுப் பரிந்துரைக்கவும்,

— நசரேத்தில் மரியன்னை வாழ்ந்த வாழ்வைத் தொடரவும்.

செபமாலைக் கன்னியர் சபை உன்னை வரவேற்கிறது.

தகமை : O.L. சித்தியடைந்திருக்க வேண்டும்.

விபரங்களுக்கு :

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி,

இறை அழைத்தல் ஊக்குனர்

செபமாலைக் கன்னியர் சபை

123, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்

Rev. Mother John Baptist
Rosarian Convent,
35/36 Duwana, Kochchicadai

A/33-97

### குருசுமுத்தன்னையின் கிசு கிசு 100



"நான் செய்கிற வேலைக்கு எனக்கு மோச்சம்தான் கிடைக்கு மண்ணே."

"அதெப்பிடி துணிந்து சொல்லுவாய் தம்பி."

"பதினைந்து வருசமா சபையில், சங்கத்தில் எல்லாத்திலயும் நான்தானே தலைவரா இருக்கிறன் அப்ப கிடைக்காதே பின்ன."

"அடதம்பி பதினாலு இளஞ்ஞருக்கு நீதான் இடநலாய் இருந்திருக்கிறாய். ஒரு புதியவரை உருவாக்க இல்லை எண்டு தள்ளிவிட்டிட்டா என்னதம்பி."


### அஞ்சலிக்கின்றோம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய 'மூப்பர்' என்று அழைக்கப்படும் B. J. அந்தோனிப்பிள்ளை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் ஆத்மாவுக்காக பிரார்த்திக்கும் அதே வேளையில் அவரின் உற்றார், உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்,

அதிபரும், ஊழியர்களும்
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.

### 6ம் வருட நிறைவு நாள் நினைவு அஞ்சலி



திரு. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (யோசவ்)

மலர்வு 22-08-1905 உதிர்வு 28 04-1991

வருடங்கள் ஆறோடி வடிந்தும் கண்ணின் வற்றாத ஆறோடி வருந்துகின்றோம்.
கருமத்தில் தருமத்தில் கண்ணியத்தில் கடமையினில் அன்பினிலே கனிந்த தந்தாய்
பெருமை பெற எமைவளர்த்துப் போற்றிக் காத்த பெரும்பாக்கியம் வாழ் வினிலே மறப்போமோ நாம்.
சிருவதனம் பொன்சிரிப்பு அரவணைப்பு திருநாடு பறந்த பின்பும் காணுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

72 A/ நக்கா றோட்
யாழ்ப்பாணம்.

## ஓர் அழைப்பின் குரல்
## புனித பிரான்சிஸ்கன் மறைபரப்புசகோதரர்கள்

இளைஞனே !

சமுதாயத்தில், உன்னை உயர்ந்தவனாக அர்ப்பணிப்பதிலும் விட, ஓர் மறைபரப்பு சகோதரனாக உன்னை அர்ப்பணிப்பாயா ?

நீர் ஒரு மறைபரப்பாளனாக சேர்ந்து இறைவனை அறியாத மக்களுக்கு "உலகெங்கும் போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிக்க" (மாற் 16:15) என்னைப் பின் செல்வாயா ?

எனவே நீர் ஒரு அருட்சகோதரனாக உன்னை அர்ப்பணிக்க விரும்பினால், இறைவனின் கருவியாக உன்னை அழைக்கிறார். ஆகவே. என்னோடு சேர்ந்து செயல் பட தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Vocation Director,
No. 6, College Road, Chilaw

A/26-97

## யாழ் புனித மரியன்னை பேராலயத் திருவிழா

### 6.8.97 — 15.8.97

வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு

திருநாள் வழிபாடு முதலாம் திருப்பலி காலை 6.00 மணிக்கு
திருவிழா திருப்பலி காலை 7.00 மணிக்கு
அன்னையின் பவனி மாலை, 5.00 மணிக்கு
☆ மறையுரைகளை அருள்திரு எட்வின் வசந்தராஜா அ.ம.தி அடிகள் வழங்குவார்.

### 3ஆம் ஆண்டு நினைவு



சவிரிமுத்து ஸ்ரெடியன் (சூட்டி)

மலர்வு 1-7-1975 உதிர்வு 4-8-1994

வாடா மலராய் வாழ்வீர் என்றிருந்தோம்,
வருடங்கள் இருபதாவதில் சூட்டி நீர்
வாடியதேன்? காலன் கவர்ந்து விட்டாலும்
கணங்கள் பல சென்றாலும்
காயாது உம் நினைவு.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை தினமும் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அப்பா அம்மா, அக்கா, அத்தான் அண்ணன்மார், அண்ணிமார்.

குளமங்கால்,
மல்லாகம்.

### இந்த இடத்தில் சிரிக்கவும் -3



குருக்களுக்கான இடமாற்றம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. குருக்கள் அவசர அவசரமாக தங்கள் பொருட்களை புதிய இடத்திற்கு போவதற்காக அடுக்கிக் கொண்டிருந்தனர்.

ஒரு குறிப்பிட்ட குருவிடம் பலரும் வந்து பரிசில்களைக் கொடுத்து பிரியாவிடை சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது 50 வயது தாண்டிய ஒரு மாது அக் குருவிடம் வந்து எதுவுமே பேசாது கண்ணீர் மல்க அழுது கொண்டிருந்தாள். குருவானவர் அவளைப் பார்த்து 'அம்மா அழ வேண்டாம். என்னை விட மிக நல்ல குருவானவரை ஆயர் உங்களுக்கு அனுப்புவார்" என்று சொன்னார். "ஐயோ பாதர், அதற்காகத்தான் நான் அழுகிறேன். போன முறையும் எங்கள் பழைய பங்குத் தந்தை இவ்வாறு தான் சொன்னவர்." என்று சொல்லி கண்ணீரைத் துடைத்து, மூக்கிலிருந்த நீரையும் அள்ளி எறிந்தாள்.

குருவானவர் கையில் வைத்திருந்த பொருளைத் 'தொப்' எனப் போட்டார்.

— பிள்ளை —


### விண்ணக வாழ்வில் பத்து ஆண்டுகள்



திருமதி. மேரி லூர்ட்ஸ் சவிரிமுத்து

தோற்றம் 21—5—1904 மறைவு 3—8—1987

### விண்ணக வாழ்வில் 6ம் மாதம்



திரு. சவரிமுத்து சாள்ஸ் அமிர்தநாயகம்

தோற்றம் 18-8-1930 மறைவு 13—3—1997

இவர்களது ஆன்ம சாந்திக்காக 2-8-1997 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால்துயருறும்
குடும்பத்தினர்,

இல. 57, 4 மகுறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

### புனித வளனார்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் அமர்வு ஆரம்பமானது. எமது முன்னாள் அதி சிரேஷ்டர் அருட்சகோதரர் S.A.I மத்தியு அவர்கள் தலைமை வகித்தார். இரண்டாவது சுற்று வாக்களிப்பில் மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று எமது சபையின் புதிய தலைவராக அருட்சகோதரர் A. சூசைதாசன் தெரிவுசெய்யப்பட்டார். இறைவனுக்கு நன்றி செலுத்தி நன்றிக் கீதம் பாடப்பட்டது. இவரது ஆலோசகர்களாக அருள்சகோதரர்கள் A. ஜேம்ஸ் பீரிஸ், P. கனிசியஸ், W. M. மைக்கல், P. M. லீனஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். எமது சபையின் போஷகராக அருள்சகோதரர் M. கிறாசியாம்பிள்ளை தெரிவானார். வளனார் சபையின் இரு அருட்சகோதரர்கள் A. K. பற்றிக், Z அருளப்பா அலோசியஸ் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதி, 754 இலக்கத்தில் அமைந்துள்ள இல்லத்தில் வந்து தங்கள் பணியை ஆரம்பித்துள்ளனர்.

அருட் சகோ : ச. அருளப்பா அலோசியஸ்

## புனித வளனார் சபையின் புதிய அதி சிரேஸ்ரர்

இலங்கை புனித வளனார் சபையின் அதி சிரேஸ்ரராக அருள்சகோதரர் A. ஞானதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார், மாந்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தன் ஆரம்பக் கல்வியை புனித சவேரியார் பாடசாலையிலும் கல்லூரிக் கல்வியை முனை பத்திமா கல்லூரியிலும் முடித்த பின், கொழும்புத்துறை பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சியை முடித்தி இவர் தற்பொழுது திருமலை புனித வளனார் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றுகிறார். பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்கள்.

## அமதிபுரத்தில் அருட் தந்தை கில்லறி ஜெபநேசனின் திருஉருவப்பட திரைநீக்கல் விழா

யாழ் மறை மாவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தின் காலம் சென்ற இயக்குனர் கில்லறி ஜெபநேசனின் திரு உருவப்பட திரைநீக்க விழா கடந்த 26.06.97 வியாழன் அமதிபுர மனித முன்னேற்ற நடுநிலையத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு கிளி/முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருள்திரு. பயஸ் அடிகளாரின் தலைமையில் அமதிபுரம் மரியன்னை ஆலயத்தில் குருக்கள், இறைமக்களும் நிலையப்பணியாளரும் ஒன்றுகூடி இரங்கற் பலி ஒப்புக்கொடுத்தபின் அன்னாரின் திரு உருவப் படம் பவனியாக அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு மறைக்கோட்ட முதல்வரால் திரை நீக்கம் செய்து வைக்கப் பட்டது.

கிளி/முல்லை மனித முன்னேற்றத்தின் நடு நிலைய இயக்குனர் அருள்திரு ஜே. பி. அன்ரனிதாஸ் தலைமையில் இடம்பெற்ற இரங்கற் கூட்டத்தில் திரு உருவப்படத்திற்கு நிலைய இணை இயக்குனர் அருட்திரு தவராஜசிங்கம் மலர்மாலை அணிவிக்க யாழ் பல நோ. கூ. ச. தலைவர் திரு சிறில் அவர்களால் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. செல்வி பிறின்சி, திரு. அன்ரன் என்போரால் அன்னார் பற்றிய புலம்பல் கீதம் பாடப் பட்டது. நிலைய இணைப் பாளர் திரு. இ. கணேசபிள்ளை குருக்கள், இறை மக்கள், இந்துமத சகோதரர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை வரவேற்று உரை நிகழ்த்தினார். போரூட் நிலைய பிரதிநிதி திரு. சாந்தலிங்கத்தின் இரங்கல் உரை இடம்பெற்றது. குருக்கள் சார்பில் மறைக் கோட்ட முதல்வர் இரங்கல் உரை நிகழ்த்தினார். அவர் தமது இரங்கல் உரையில் அடிகளாரின் சிறைவாசம் பற்றியும் காலம் சென்ற அடிகளார் அடுத்தடுத்து தம்மைக் கேட்ட ஒரு கேள்வி ''ஏன் என்னை கைது செய்தார்கள்'' என்பது பற்றி எடுத்துக்கூறி அவர் ஒரு மாமனிதர் என வர்ணித்தார்.

செல்வி லூசியா பாமா யோசப்.
நிலையப் பணியாளர்.
கியூடெக்
கிளிநொச்சி.

## மன்னாருக்கு புதிய குருமணிகள் மூவர்

மன்னார் திருச்சபை எதிர் வரும் ஆவணி 1997இல் கபிரியேல் அருள்பிரகாசம், இராயப்பு அகஸ்ரின், P. கிறிஸ்து நேசரட்ணம் ஆகிய மூவரையும் புதிய குருமணிகளாக பெற இருக்கிறது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்கள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இவர்களைக் குருக்களாகத் திருநிலைப்படுத்துவார்.

## தேசிய மறைஆசிரியர் தேர்வுக்கான வகுப்பு

தேசிய மறை ஆசிரியர் தேர்வு 2 ஆம், 3ஆம் ஆண்டுகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான வகுப்புகள் சனிக் கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறுகின்றன.

இவ்வகுப்பிற்கு விண்ணப் பித்தவர்கள் இதில் பங்கு கொண்டு பயனடையவும்.

இயக்குனர்
யாழ் மறைக்கல்வி நிலையம்

## யூபிலி ஆண்டு பேச்சுப் போட்டிகளில் நெடுந்தீவுப் பங்கு முதலாம் மூன்றார் பிரிவுகளில் முதலிடம்

மேற்படி பேச்சுப் போட்டி 18-2-97 யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றபோது. யாழ் புனித யுவானியார், யாழ் புனித அடைக்கல அன்னை, பாசையூர், பண்டியந்தாழ்வு, நாவாந்துறை, ஆனைக்கோட்டை, சூறாவத்தை, இளவாலை, நெடுந்தீவு ஆகிய பங்குகள் கலந்து கொண்டன.

உடன் அறிவிக்கப்பட்ட பேச்சுப் போட்டி முடிவுகளின்படி பிரிவு ஒன்று முதலாம் இடத்தை சா. மேரி மெடோனா நெடுந்தீவுப் பங்கு, பிரிவு மூன்று முதலாம் இடத்தை யோ. விமலகாந்தன் — நெடுந்தீவுப் பங்கு ஆகியோர் தட்டிக் கொண்டனர்.

பேச்சுப் போட்டி முடிவுகள் விபரம் பின் வருமாறு

பிரிவு 3

| | | |
|---|---|---|
| 1 ஆம் இடம் — | யோ. விமலகாந்தன் — | நெடுந்தீவு |
| 2 ஆம் இடம் — | ம. ஜெனிவர் ஜானகி — | யாழ்/யுவானியார் |
| 3 ஆம் இடம் — | செ. சுதர்சினி — | இளவாலை |

பிரிவு 2

| | | |
|---|---|---|
| 1 ஆம் இடம் — | எ. அபிராமி — | பாசையூர் |
| 2 ஆம் இடம் — | ந. ஷீரோ — | பாண்டியன்தாழ்வு |
| 3 ஆம் இடம் — | ரஜனியா — | யா/ அடைக்கல அன்னை |

பிரிவு 1

| | | |
|---|---|---|
| 1 ஆம் இடம் — | சா. மேரி மெடோனா — | நெடுந்தீவு |
| 2 ஆம் இடம் — | சா. வினித்தா — | ஆனைக்கோட்டை |
| 3 ஆம் இடம் — | ஏ. அனுசாணி — | பாண்டியன்தாழ்வு |

— கட்டுரைப் போட்டியின் முடிவுகளும், பெயர் விபரங்களும் பின்னர் வெளியிடப்படும்.

## இறந்தவர்கள் அனைவரையும் இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுப்போம்

— குரு முதல்வர் அருள்திரு J.P.E. செல்வராஜா

யூலை 9 ம் திகதிநவாலிசென் பீற்றர் தேவாலயத்தில் நடைபெற்ற குண்டு வீச்சு அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்காக பங்குத் தந்தை எரிக் றொசான் அடிகளாரால்ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டாம் ஆண்டு நினைவு, இரங்கல் திருப்பலியில்யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் J.P.E செல்வராசா அடிகள் இறந்தவர்கள் அனைவரும் இறைவனுக்கே காணிக்கையாக ஒப்புக் கொடுப்போம். இது போன்ற துன்பங்கள் இனி எம்மில் நிகழாமல் இறைவனை வேண்டுவோம் என்று தெரிவித்தார்.

இறந்தவர்களின் படங்கள் ஆலய முன்றலில் மாலையிடப்பட்டு, வரிசையாக வைக்கப்பட்டு நடத்தப்பட்ட இந்த இரங்கல் திருப்பலியில் இறந்து போனவர்களின் உறவினர்களான பல இந்து சமய சகோதரர்களும் கலந்து கொண்டனர்.

சண்டிலிப்பாய் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இருதயநாதன் ''இராயப்பர் சந்நிதியில் இது ஏன் நடந்தது ?'' என்று கேட்டு ஆரம்பித்த முன்னுரையோடு தொடங்கப் பட்ட இந்த வழிபாட்டில் பலர் கண்ணீர் மல்க நின்ற பங்கெடுத்தது நெஞ்சை உருக்குவதாய் இருந்தது. ஒன்பது குருக்களின் கூட்டுப் பலியின் இறுதியில் சென் பீற்றர்ஸ் பாடசாலை அதிபர் திரு சிறில் சுகந்திரன் நன்றியுரை வழங்க, இறந்தவர்களின் புகைப்படங்களை ஆசீர் வதித்த அருட்தந்தையர்கள் படங்களோடு நின்று, புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

## புதிய குருக்களின் நியமனங்கள்

அருள்திரு சே. வின்ஸ்ரன் ஜேம்ஸ் — நாரந்தனைப் பங்கு துணைக்குரு
அருள்திரு றெனோல்ட் யோர்ஜ் — இளவாலை பங்கு துணைக்குரு
அருள்திரு ஜோ. சனிஸ்ரன் — புனித பத்திரிசியார் கல்லூரி துணைக்குரு
இவர் புனித மாட்டீனார் குரு மடத்தில் தங்கியிருப்பார்.

## திருப்பாலத்துவ சபை.. (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாலர் சபைச் சிறுவர்களை ஊக்குவிக்கவும், சபைக் கூட்டங்களில் உற்சாகத்துடன் பங்குபற்றவும், அதன் நோக்கத்தையடைய செயல்படுத்தவும் இவ்வொன்றுகூடல் யாழ் மறைமாவட்ட திருப்பாலர் சபை இயக்குனர் அருட்திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகளால் ஒழுங்கு செய்யப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட் சகோதரி சோபியா சிறப்புரையாற்றினார். ''யேசுவின் சிறுவர்கள்'' என்ற சிறிய பாடலையும் சிறுவர்களுக்கு கற்றுக்கொடுத்து உற்சாகப்படுத்தினார். திருப்பாலத்துவ சபையின் தலைவர் திரு. ஜெயசீலன் இக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

## எமது கல்லூரியின் பெருமையை உலகறியச் செய்யுங்கள்

— திரு ஞானம் பீரிஸ் (பிரான்ஸ்)

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை ''சத்திய பாதை - 1997'' என்னும் தங்கள் மலரை இவ்வருடம் வெளியிட இருக்கின்றது. 1989 ஆம் ஆண்டு முதல் சத்திய பாதை என்னும் இந்த மலரை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சத்திய பாதை 97 தொடர்பான தொடர்புகட்கு:-

என். எம். ஜெயரட்ணம் பொதுச் செயலாளர்
110, Avenue du President Wilsan. 93100 MONTREUIL FRANCE.

இதனை விட பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும் சகோதரத்துவத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கும் ஒரு பாலமாக 3 மாதத்திற்கு ஒரு முறை The Patrician என்ற செய்தி இதழையும் (15 வைகாசி — 15 ஆவணி) வெளியிட்டு உள்ளது.

இந்தக் கிளையின் 97 – 98 ஆம் ஆண்டுக்கான நிறைவேற்றுக் குழுத் தலைவர் திரு ஞானம் பீரிஸ் இந்த இதழின் மலரில்

''இணைந்து வாருங்கள் – இசைந்து
பாடுங்கள்! எங்கள் கல்லூரியின்
பெருமைதனை உலகறியச் செய்யுங்கள்'' என்று அழைப்பு விடுத்துள்ளார்.

## கண்டி- அருள் ஊற்றிற்கு...... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக் கத்தோலிக்க தமிழ் மக்களின் விசுவாசத்தை கட்டிக் காக்கும் பொறுப்பான பணி அருள் ஊற்றிற்கு உண்டு. அப்பணியை மிகவும் சிறப்பாகவே ஆற்றி வரும் அருள் ஊற்று தடைகளைக் கண்டு தயங்கி விடாது துணிவோடு பெருக்கெடுத்து ஓட வாழ்த்துகிறோம்.

அருள் ஊற்றைப் பெற விரும்புவோர் அருள் ஊற்று, ஆயர் இல்லம், கண்டி என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். அருள் ஊற்றின் விலை அன்பளிப்பு ரூ 2/-

அருள் ஊற்றின் ஆசிரியர் அருள்திரு எச். என். ஆபிரகாம் யாழ் பாசையூர் புனித அந்தோனியார் கோவில் பங்கைச் சார்ந்தவர். கண்டி மறை மாவட்டத்தில் பணி புரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புனித கென்றியரசர் அரசனாக இருந்த போதிலும் கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழ்ந்தார்.

— அருள்திரு P. யேசுநேசன் அ. ம தி. முதல்வர்

யூலனூர் புனித கென்றியரசர் திருவிழா யூலை 13ஆம் திகதி நடைபெற்ற போதே அ. ம. தியாகிகளின் யாழ். மாகாணத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தமது மறையுரையில் புனித கென்றியரசர் கிறிஸ்தவ புண்ணியங்களிலே தழைத்தோங்கி வாழ்ந்தார். அவரது வாழ்க்கை முறையை நாமும் பின்பற்றி வாழ்தலே புனிதருக்கு செலுத்த வேண்டிய நன்றியாகும் என்றார்.

கடந்தகால இடம்பெயர்வினாலும் போர்நிகழ்வுகளினாலும், பாதிப்புற்றிருந்த மேற்படி ஆலயத்தை பங்குத்தந்தை அருள்நேசன் அடிகள் பங்கு மக்களின் துணையோடு மிகவும் சிறப்பான விதமாக கட்டியெழுப்ப வழிவகுத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. திருநாட் திருப்பலியில் அருள்திரு P. யேசுநேசன் அடிகளாருடன் அருள்திரு ம. போல் நட்சத்திரம் அடிகளாரும் கலந்து கொண்டார்.

செல்வி. ஆ. விஜயகலா
யூலனூர், கென்றியரசர் ஆலயம்.

புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1997ஆம் ஆண்டு ஆவணி 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல P 193